# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | புரட்டாதி 15 புதன்கிழமை | 01.10.2025 | கதிர் 326

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel







## தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கோரும்

# உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாளில் தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 01

தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கோரி வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் - செம்மணியில் நடத்தப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று நிறைவுக்கு வந்தது.

இறுதி நாளான இன்று சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் பாரிய தீப்பந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை விவகாரம் தொடர்பாக உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையும் போராட்டக்காரர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டத்தின் இறுதி நாளான இன்று மதியம் ஒரு மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக்காரர்கள், தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இனப் படுகொலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், இலங்கையில் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்புக்கும் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்ததுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்தனர்.



## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக் .01

ஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயங்களை முடித்துக்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இன்று காலை (10) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

ஜப்பானுக்கான விஜயத்துக்கு முன்னர், ஜனாதிபதி அமெரிக்காவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொண்டிருந்தார்.

7 ➤

## குளவி கொட்டியதில் ஒன்பது பேர் பாதிப்பு



கொழும்பு, ஒக் .01

மஸ்கெலியா, மவுஸ் ஸாக்கலை தோட்ட சீட்டன் பிரி வில் குளவி கொட்டியதில் ஒன்பது தொழிலாளர்கள் பாதிக கப்பட்டுள்ளனர். அவர்களில் பெண் தொழிலாளர்கள் அறுவரும் அடங்குகின்றனர்.

7 ➤

## கைவிடப்பட்ட நிலையில் சிசு மீட்பு: தாய், தந்தை கைது

அம்பாறை, ஒக் .01

கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சிசு வின் பெற்றோரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் பிரதேசத்தில் பிறந்து சில நாட்களான பெண் சிசு கடந்த ஞாயிற்றுக் கிழமை(28) மீட்கப்பட்டிருந்தது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்டு வந்த அக்கரைப்பற்று பொலிஸார் , ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்த குழந்தையின் தந்தை மற்றும்

7 ➤



## ஜெனிவா பறந்தார் சிறீதரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரின் பக்க நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று ஜெனிவாவைச் சென்றடைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், அங்கு வேறு பல

7 ➤



## அனுர பிரியதர்ஷனவிற்கு எதிராக திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல்



2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதாகக் கூறி பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 6.1 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை செலவழித்து அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பெற்றோலிய அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் அவரது மனைவி உட்பட ஆறு பிரதிவாதிகளுக்கு எதிராக இன்று (01) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகைகள் ஒப்படைக்கப்பட்டன.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டன.

திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையின் கீழ் இந்த வழக்கின் மற்றொரு பிரதிவாதியான முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகப் பணியாற்றியதாகக் கூறப்படும் அனுர செனவிரட்னவும் பெயரிடப்படுவார் என்றும் முறைப்பாட்டு தரப்பு நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

குறித்த பிரதிவாதி தொடர்பான குற்றப்பத்திரிகையை வழங்குவதற்காக வழக்கை ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

# 8 மாதங்களில் ஒரு பில்லியன் டொலருக்கு வாகன இறக்குமதி

கொழும்பு, ஒக் .01

இலங்கையில் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதற்கு அமைய, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையிலான 8 மாத காலப்பகுதியில், நாட்டிற்குள் வாகன இறக்குமதிக்காக 1,007.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட 2025 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்கான வெளிநாட்டு பிரிவு செயல்திறன் அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஒரே மாதத்தில் அதிகபட்ச வாகன இறக்குமதி செலவு கடந்த ஒகஸ்ட் மாதம் பதிவான நிலையில், அதன் எண்ணிக்கை 255.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2025 ஆம் ஆண்டில் இதுவரை ஒவ்வொரு மாதமும் நாட்டிற்குள் வாகன இறக்குமதிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விபரம் பின்வருமாறு.. (மில்லியன் டொலர்களில்)

ஜனவரி - 29.1
பெப்ரவரி - 22.3
மார்ச் - 54.0
ஏப்ரல் - 145.6
மே - 125.2
ஜூன் - 169.6
ஜூலை - 206.0
ஒகஸ்ட் - 255.7

# வெஹெரகல நீர்த்தேக்கத்திலிருந்து ஆயுத மூட்டைகள் மீட்பு

*கொழும்பு, ஒக் .01*

*கதிர்காமத்தில் உள்ள வெஹெரகல நீர்த்தேக்கத்திலிருந்து 74வு-56 ரக மெகசின்கள், 35 டுஆபு ரக ட்ரம்ஸ் மற்றும் 05 ஆீ ஆபு ட்ரம்ஸ் பொக்ஸ் உள்ளிட்ட பல அடையாளம் தெரியாத மெகசின்கள் மீட்கப்பட்டுள்ளன.*

*அத்துடன் தோட்டாக்களுடன் கூடியதாக சந்தேிக்கப்படும் 2 பெட்டிகளும், ஆயுதங்கள் என சந்தேகிக்கப்படும் 2 மூட்டைகளும் அந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

*இராணுவத்திற்கு கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன.*

*வெஹெரகல நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்து வருவதால் இந்த பொருட்கள் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பொருட்கள்கண்டுபிடிக்கப்பட்ட இடம்கோனகனார பொலிஸ் பிரிவின் கீழ் வருவதால், மேலதிக விசாரணைகளுக்காக கோனகனார பொலிஸ் நிலையத்தில் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*இந்த நீர்த்தேக்கத்தின் மதகு அருகே இன்னும்தண்ணீர் இருப்பதால், கடற்படையின் சுழியோடிகளின் உதவியுடன் அந்த இடம் ஆய்வு செய்யப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(ஐ)*



# 250 பிள்ளைகளுடன் ஆரம்பமான தெரண, சிக்னல் ஆகாயத்தில் ஒரு பயணம்



கொழும்பு, ஒக் .01

இலங்கை முழுவதிலுமிருந்து 250 பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் சிறிலங்கன் ஏர்லைன்ஸ்ீக்குச் சொந்தமான நாட்டின் மிகப்பெரிய விமானம், சற்றுமுன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இன்றைய சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, நாட்டின் கவர்ச்சிகரமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை வானிலிருந்து காணும் வாய்ப்பை சிறுவர்களுக்கு வழங்கிய “தெரண, சிக்னல் ஆகாயத்தில் ஒரு பயணம்” திட்டம் இன்று (01) காலை வெற்றிகரமாக ஆரம்பமானது

இந்நாட்டின்சிறுவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விமான பயணத்தில் பங்கேற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 250 ஆகும்.

எப்போதும்சிறுவர்களுக்கு சிறந்ததை வழங்கும் ‘டிவி தெரண’, இந்த ஆண்டு சர்வதேச சிறுவர்கள் தினத்துடன் இணைந்து இலங்கை பிள்ளைகளுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்க முடிவு செய்தது.

அதன்படி, இலங்கையின் அதிசயங்களை முதன்முறையாக வானிலிருந்து காணும் வாய்ப்பை சிறுவர்களுக்கு வழங்கும் நோக்கில் தெரண, சிக்னல் ஆகாயத்தில் ஒரு பயணம்” திட்டம் தொடங்கப்பட்டது.

12 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இந்த பெறுமதிக்க வாய்ப்பிற்காக, “ஆகாயத்தில் இருந்து என் நாடு”என்ற கருப்பொருளில் 250 சொற்களுக்கு குறையாத கட்டுரை அல்லது அழகான ஓவியத்தை வரைந்து தபால் மற்றும் வட்ஸ்அப் மூலம் அனுப்புமாறு அறிவிக்கப்பட்டது.

அதன்படி, “ஆகாயத்தில் இருந்து என் நாடு” என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட சிறந்த மற்றும் மிகவும் ஆக்கப்பூர்வமான வரைபடங்கள், கட்டுரைகளில் இருந்து 250 பிள்ளைகள் “ஆகாயத்தில் ஒரு பயணம்” திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 250 பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையின் புதிய அனுபவத்தைப் பெறும் நோக்கத்துடன் இன்று காலை தெரண தலைமை அலுவலகத்திற்கு வந்தனர்.

பின்னர் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு 5 சொகுசு பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளைகளை விமான நிலைய அதிகாரிகள் வரவேற்றனர்.

உண்மையான விமான அனுபவத்தை வழங்கும் வகையில், பிள்ளைகள் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் மிகப்பெரிய விமானமான ருடு 20 இல் ஏறியதுடன், அவர்களின் பலரின் முதல் விமான பயண கனவு இன்று நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களால் விழிப்புணர்வு வீதி ஊர்வலம்




சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை, தோப்பூர் - அல்ஹம்றா மத்திய கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு வீதி ஊர்வலம் இன்று காலை இடம்பெற்றது.

குறித்த ஊர்வலமானது கல்லூரி முன்றலிலிருந்து ஆரம்பமாகி தோப்பூர் பிரதான வீதியூடாகச் சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.

இதன்போது மாணவர்கள் சுலோகங்களை ஏந்தி சிறுவர் உரிமை தொடர்பான கோசங்களை எழுப்பி ஊர்வலமாகச் சென்றனர்.

இவ்வருடத்திற்கான சிறுவர் தினமானது “உலகை வழிநடாத்த அன்பை போசியுங்கள்” எனும் தொணிப் பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் “ தலைமுறை ஒன்றை உருவாக்கிய தலைமுறையைப் பாதுகாப்போம்” என்ற கருப்பொருளின் கீழ் இன்று சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது. (ஐ)

## ‘உறுமய’ உறுதிப் பத்திர மோசடி பெண் உட்பட இருவர் கைது

கொழும்பு, ஒக் .01

‘உறுமய’ வேலைத்திட்டத்தின் கீழ் நிரந்தர காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதாக வாக்குறுதி அளித்து சுமார் 100 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாக சந்தேகிக்கப்படும் இரண்டு நபர்களை குற்றப் புலனாய்வு திணைக்களம் (CID) கைது செய்துள்ளது.

மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் பக்கமுனைவைச் சேர்ந்த 43 வயது பெண் ஒருவர் கடந்த 26ஆம் திகதி கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டபோது, அவர் கிரிபத்கொடவில் உள்ள ஒரு தற்காலிக விடுதியில் வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் தொடர்புடைய 55 வயதுடைய மற்றொரு சந்தேக நபர் மஹரகமவைச் சேர்ந்தவர். அவர் 29ஆம் திகதி கைது செய்யப்பட்டு, கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

‘உறுமய’ திட்டத்தின் கீழ் கல்முனைப் பகுதியில் உள்ள 164 தொழிலதிபர்களுக்கு பதிவு செய்யப்படாத நிலங்களுக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதாக உறுதியளித்து, சந்தேக நபரான பெண் ஒவ்வொருவரிடமிருந்தும் 600,000 ரூபாய் பெற்றதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கல்முனை பகுதியைச் சேர்ந்த 50 தொழிலதிபர்கள் சிறிகொத்த கட்சித் தலைமையகம் மற்றும் கொழும்பு பகுதியில் உள்ள ஒரு பிரபல ஹோட்டலுக்கு வரவழைக்கப்பட்டு, அரசியல் பிரச்சினைகள் குறித்துப் பேசி, பத்திரங்களை வழங்குவதாக உறுதியளித்து மோசடியாகப் பணம் பெற்றதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் உள்ள மோசடியாகப் பெறப்பட்ட பணத்தில் 2 மில்லியன் ரூபாயை முடக்க நீதிமன்ற உத்தரவுகளைப் பெற விசாரணை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## இரு இளைஞர்களின் உயிரை பறித்த அதிவேகம்

*கொழும்பு, ஒக் .01*

*அநுராதபுரம் – ஹொரவபொத்தனை – கபுகொல்லேவ வீதியின் கட்டுவரகொல்லேவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.*

*கபுகொல்லேவயிலிருந்து ஹொரவபொத்தனை நோக்கி பயணித்த ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் பயணித்த பஸ்ஸ /டன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் ஹொரோவ்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர்.*

*விபத்தில் உயிரிழந்தவர்கள் ஹொரவபொத்தனை, கட்டுவரகொல்லேவ மற்றும் நெலுகொல்லேவ பகுதிகளைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடைய பாத்ல சிஹான் மற்றும் பிரவீன் காவிந்த இலங்க சிங்ஹ ஆகிய இரு*

*இளைஞர்கள் என தெரியவந்துள்ளது.*

*மோட்டார் சைக்கிளின் அதிக வேகமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.*

*விபத்து தொடர்பாக பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவபொத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)*



# சம்பவ இடத்திற்கு செல்லாமல், நானும் டிக்கெட் போட்டு சென்னைக்கு செல்ல வேண்டுமா..? செந்தில் பாலாஜி பேட்டி



"கரூர் துயர சம்பவம் மிக கொடுமையானது, யாராலும் நினைத்துக் கூட பார்க்க முடியாதது என கரூரில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் செந்தில் பாலாஜி பேட்டி அளித்துள்ளார். கரூர் விவகாரம் குறித்து செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சருக்கு நன்றி! மேலும் கரூர் மக்களுக்கு ஆதரவாக இருந்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்றிகள். கரூரில் நடந்த சம்பவத்தை அரசியலாக பார்க்க விரும்பவில்லை. மனிதாபிமான அடிப்படையில் உதவிக்கரம் நீட்டப்பட்டது. கூட்டம் நடத்தும்போது, எவ்வளவு மக்கள் கூடுவார்கள் என கணித்து அதற்கேற்ற இடத்தை தேர்வு செய்ய வேண்டியது ஒரு அரசியல் கட்சியின் பொறுப்பு. கரூர் லைட் அவுஸ் கார்னரில் அதிகபட்சம் 7000 பேர் நிற்கலாம், உழவர் சந்தை அருகே அதிகபட்சம் 5000 பேர் கூடலாம். கரூர் கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 108 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். வேலுச்சாமிபுரத்தில் 2000 செருப்புகள் வீதியில் கிடந்தன, காலி தண்ணீர் பாட்டில் ஒன்றாவது நீங்கள் பார்த்தீர்களா? இதிலிருந்தே தெரிகிறது, மக்களுக்கு குடிநீரோ, பிஸ்கட் பாக்கெட்டோ வழங்கப்படவில்லை.

விஜய், அன்று மாலை 4 மணிக்கு வந்திருந்தால் இதுபோன்ற அசம்பாவிதம் ஏற்பட்டிருக்காது. குறித்த நேரத்தில் வந்திருந்தால் பிரச்னையே நடந்திருக்காது. கரூர் பரப்புரையின் போது குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் கூட தவெக தரப்பில் செய்து தரப்படவில்லை. விஜய் பேசத் தொடங்குவதற்கு முன்பே அங்கு நிலைமை மோசமடைந்துவிட்டது, அவர் கவனத்தை ஈர்க்கவே செருப்பு வீசப்பட்டிருக்கலாம். கூட்டநெரிசல் அதிகமாகும்போது, ஜெனரேட்டர் அறை தடுப்புகளை உடத்து உள்ளே விழத்தொடங்கினர், அப்போதுதான் ஜெனரேட்டர்கள் ஆஃப் செய்யப்பட்டது. அப்போது கூட சாலை விளக்குகள் ஆஃப் செய்யப்படவில்லை. அவர்கள் கூடுதலாக அமைத்த விளக்குகள் மட்டும் ஆஃப் செய்யப்பட்டது. வீடியோவில் எல்லம் தெளிவாக உள்ளது, எங்கும் மின் விநியோகம் தடைபடவில்லை. கரூரில் 12 மணிக்கு பரப்புரை என சொன்னவர்கள் 4 மணிக்கு வந்திருந்தால் கூட இந்த அசம்பாவிதம் நடந்திருக்காது.

வழக்கமாக அரசியல் தலைவர்கள் செய்வதற்கு நேர் மாறாக, விஜய் வாகனத்தின் உள்ளே சென்று, விளக்குகளை அணைத்துவிட்டார். அவரைக் காண வேண்டும் என்பதற்காகவே கூட்டம் அவரை பின் தொடர்ந்தது. கூட்ட நெரிசல் அதிகமாக இருப்பதால் வாகனத்தை முன்கூட்டியே நிறுத்திவிடலாம் என காவல்துறை எச்சரித்த பின்பும், தவெகவினர் அதை கேட்காமல் வாகனத்தை நகர்த்திச் சென்று அங்கு நிறுத்தியுள்ளனர். கரூரில் மட்டும் எப்படி நெரிசல் ஏற்பட்டது என்ற கேள்வி, "தினமும் நான் வாகனத்தில் செல்கிறேன். இன்று மட்டும் எப்படி எனக்கு விபத்து நடந்தது?" என்று கேட்பதுபோல் உள்ளது. விஜயின் ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மயக்கமடைந்துள்ளனர். சொன்ன நேரத்திற்கு விஜய் வந்திருந்தால் இதுபோன்ற அசம்பாவிதம் நடந்திருக்காது. சரியான திட்டமிடல்களை செய்ய தவறிவிட்டனர்.

கரூரில் பரப்புரை நடக்கும் இடத்திற்கு 500 மீட்டருக்கு முன்பாகவே விளக்கை அணைத்து, ஸ்க்ரீன் போட்டு பேருந்தின் உள் பகுதிக்கு சென்றுவிட்டார் விஜய். கூட்டம் எல்லாம் பரப்புரை பகுதிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு செய்தாரா?. சம்பவம் நடத்தபோது சம்பவ இடத்திற்கு செல்லாமல், நானும் டிக்கெட் போட்டு சென்னைக்கு செல்ல வேண்டுமா..?. அரசு தன் கடமையை சரியாக செய்தது, ஆனால் அந்த அரசியல் கட்சி தனது கடமையை சரிவர செய்ய வில்லை. விஜய் கூட்டத்திற்கு வந்தது கட்டுக்கடங்காத கூட்டம் அல்ல, கட்டுப்பாடற்ற கூட்டம். தொடர்ந்து பேசிய செந்தில் பாலாஜி, எப்படி உடனடியாக மருத்துவமனைக்கு வந்திர்கள்? என எழுப்பப்படும் விமர்சனத்திற்கு பதில் அளித்தார். பாதிப்பு நடந்துள்ளது எனத் தெரிந்ததும் அங்கு செல்லாமல், டிக்கெட் போட்டு சென்னைக்கு போகச் சொல்கிறீர்களா?. பரப்புரையில் அசம்பாவிதம் நடந்த தகவல் கிடைத்ததும், கட்சி அலுவலகத்தில் இருந்து உடனடியாக 7.47 மணிக்கு அமராவதி மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். என்று கூறியுள்ளார். (ஐ)

# லடாக் மக்களுக்கு பிரதமர் மோடி துரோகம்: ராகுல்காந்தி குற்றச்சாட்டு



*பிரதமர் மோடி லடாக் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார். சிறப்பு அந்தஸ்து மற்றும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி லடாக்கில் நடந்த போராட்டத்தில் கடந்தவாரம் வன்முறை வெடித்தது. இதனைதொடர்ந்து போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானார்கள்.*

*இதில் கார்கில் போர் வீரர் சேவாங் தார்ச்சினும் ஒருவர். இந்நிலையில் பிரதமர் மோடி லடாக் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார். தென் அமெரிக்காவில் நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மக்களவை எதிர்க்கட்சி தலைவரான ராகுல்காந்தி, தனது எக்ஸ் தள பதிவில், "தார்ச்சினின் தந்தையின் வீடியோவை இணைத்து, "அப்பா ராணுவத்தில், மகனும் ராணுவத்தில், தேசபக்தி அவர்களது ரத்தத்தில் ஓடுகின்றது.*

*ஆனால் பாஜ அரசு அவர் லாடாக்கிற்காகவும் அவரது உரிமைகளுக்காகவும் நின்றதால் இந்த துணிச்சலான தேசத்தின் மகனை சுட்டுக்கொன்றது. தந்தையின் வலி நிறைந்த கண்கள் ஒரு கேள்வியை கேட்கின்றன. தேசத்திற்கு சேவை செய்ததற்கான வெகுமதி இதுதானா? லடாக்கில் நடந்த இந்த கொலைகள் குறித்து பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)*

# கரூரில் 41 பேர் பலிக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை பாதுகாப்பான இடங்களையே இனி பிரசாரத்துக்கு கேட்பேன்: 3 நாட்களுக்கு பின் வீடியோ வெளியிட்டு சொல்கிறார் விஜய்



பிரசாரத்துக்கு இனி பாதுகாப்பான இடங்களையே கேட்போம் என கரூர் கொடூர சம்பவம் நடந்து 3 நாட்களுக்கு பின் வீடியோ வெளியிட்டு நடிகர் விஜய் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை இரவு (செப். 27) விஜய்யின் கரூர் பிரசாரத்தில் ஏற்பட்ட பெரும் கூட்ட நெரிசலால் இதுவரை 41 பேர் உயிரிழந்திருப்பது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த துயர சம்பவம் குறித்து விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு, ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணைக் குழு அமைத்து விசாரித்து வருகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக தவெக தலைவரும் நடிகருமான விஜய் நேற்று வெளியிட்ட வீடியோவில் பேசியிருப்பதாவது: என் வாழ்க்கையில் இப்படி ஒரு வலி மிகுந்த நேரத்தை சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. மனது முழுக்க வலி.. கரூரில் தவெக எந்த தவறும் செய்யவில்லை. தொண்டர்கள் மீது கை வைக்காதீர்கள். என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். வீட்டில் அல்லது அலுவலகத்தில்தான் இருப்பேன். இனி மக்கள் பாதுகாப்பே முக்கியம். இனி பாதுகாப்பான இடங்களையே கேட்போம். எனது அரசியல் பயணம் இன்னும் வலிமையாக தொடரும். என்னுடைய வலிகளை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், மற்ற கட்சி தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

5 மாவட்டங்களில் பிரசாரம் செய்தேன். கரூரில் மட்டும் ஏன் இப்படி நடந்தது? பதற்றமான சூழலை தவிர்க்கவே கரூர் செல்லவில்லை. சூழலை புரிந்து கொண்டு எங்களுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்த அரசியல் தலைவர்களுக்கு நன்றி. விரைவில் அனைத்து உண்மையும் வெளிவரும். பாதிக்கப்பட்டவர்களை விரைவில் சந்திப்பேன். இவ்வாறு கூறியுள்ளார். கரூரில் பிரசார கூட்டத்தில் 41 பேர் பலியானதற்கு தவெக எந்த தவறும் செய்யவில்லை என விஜய் சொன்னாரே தவிர, அந்த சம்பவத்துக்கு அவர் வருத்தம் கூட தெரிவிக்காதது விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (ஐ)

# நடிகர் சிவாஜி கணேசனின் 98–வது பிறந்தநாள்: அவரது மணிமண்டபத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

*நடிகர்சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். நடிகர் சிவாஜி கணேசனின் 98–வதுபிறந்தநாள் இன்றுகொண்டாடப்படுகிறது. இதனையொட்டி அரசியல் தலைவர்கள், திரை பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் உள்ளிட்ட பலரும் சிவாஜி கணேசனின் சிலைக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நடிகர் சிவாஜி கணேசன் பிறந்தநாளையொட்டி, சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள சிலை மற்றும் உருவப்படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர். அப்போது நடிகர் பிரபு, விக்ரம் பிரபு, கவிஞர் வைரமுத்து உள்ளிட்ட சிவாஜி கணேசனின் குடும்பத்தினர் உடனிருந்தனர். கடந்த 2001–ம் ஆண்டு ஜூலை 21–ம்தேதி உடல்நலக்குறைவு காரணமாக சிவாஜி கணேசன் மறைந்தார். சிவாஜி கணேசனின் உடல் மறைந்தாலும் அவரது நடிப்பு தமிழ் சினிமா உள்ளவரை இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நடிகர் சிவாஜி கணேசன் கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், உள்பட பல விருதுகளை பெற்றுள்ளார் என்பதும் அவர் நடித்த ஒரு சில திரைப்படங்கள் தேசிய விருது பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# மூத்த தலைமுறையினரின் உரிமைகளை பேசும்

# உலக முதியோர் தினம்




யே.வினிதா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



உலக நாடுகள் அனைத்திலும் ஆண்டுதோறும் அக்டோபர் 1 ஆம் திகதி சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்நாளை அனுசரிப்பதன் நோக்கம், சமூகத்தின் அத்திவாரமாக விளங்கிய மூத்த குடிமக்களின் பங்களிப்புகளை நினைவுகூர்வதோடு, அவர்களது நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பை வலியுறுத்துவதே ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 14ஆம் திகதி டிசம்பர் மாதம் 1990 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரிவு 45ஃ106 தீர்மானத்திற்கமைய இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1991 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாண்டிற்கான கருப்பொருள் "Older Persons Driving Local and Global Action: Our Aspirations- Our Well-Being and Our Rights" என்பதாகும்.



முதியோர்கள் என்பது வெறும் வயது முதிர்ந்தவர்கள் அல்ல வாழ்க்கைப் பயணத்தில் தங்கள் அனுபவம், அறிவு, உழைப்பு, அர்ப்பணிப்பின் மூலம் சமூக வளர்ச்சிக்குப் பங்களித்தவர்கள்.

ஆனால், இன்று உலகம் முழுவதும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களில் உடல்நலப் பிரச்சனைகள், தனிமை, புறக்கணிப்பு, பொருளாதார தட்டுப்பாடு முதலியவை குறிப்பிடத்தக்கவை. இன்று முதியவர்கள் உலகில் பல்வேறுபட்ட சாதனைகளை சாதித்து வருவதனை ஊடகங்களின் மூலமாக எம்மால் அறிய முடிகின்றது. இளமைக்காலத்தில் தான் மேற்கொண்ட தொழில் முயற்சியில் தோல்வியுற்று அதனை முதுமை காலத்தில் சாதித்து காட்டிய சாதனையாளர்களும் இருந்திருக்கின்றனர். இவ்வாறு இருந்தாலும் இன்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை முதியவர்கள் எதிர்நோக்கிய வண்ணமே உள்ளனர்.



பெற்ற பிள்ளைகள், உறவினர்களின் தொடர் தாக்குதல் அநாகரிகமான வார்த்தை பிரயோகங்களால் பாதிக்கப்பட்ட பல முதியோர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி வீதிக்கு வரும் நிலை இன்று உருவாகியுள்ளது. வயது முதிர்ந்தவர்கள் பொதுவாக தங்கள் பிள்ளைகளாலும் உறவுகளாலும் தொடர்ச்சியாக இம்சை படுத்தப்படுகிறார்கள். அனுபவம் மிக்க முதியவர்கள்,

சிறுவர்கள் என இருக்கும் வீடுகளில் தான் சந்தோசமும் நிறைவும் இருக்கும் என குறிப்பிட்டாலும் முதியவர்கள் தமக்கு ஒரு இடைஞ்சல் என்றே பலரும் நினைக்கிறார்கள். அதனால் தான் பெரும் வசதி படைத்த பிள்ளைகள் கூட தமது வயது முதிர்ந்த பெற்றோரை எங்கேயாவது அநாதைகளாக

முதியோர் இல்லங்களில் தள்ளி விடுவதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளனர்.



முதியவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். சகல விடயங்களிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கூறப்படுவதுடன் அரசாங்கம் முதியோர்களுக்குரிய சலுகைகளை பெறக்கூடியதாக விசேட அடையாள அட்டைகளையும் வழங்கி வருகின்றது. எனினும் அரசு செயலகங்களிலும் சரி,

வைத்தியசாலைகளிலும் சரி, போக்குவரத்து சேவைகளிலும் சரி அவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியது.

கமலேஸ்வரி எனும் பாட்டி இது பற்றி கூறுகையில் அரச அலுவலகங்களில் தமது தேவைக்காக செல்லும் போது நீண்ட நேரம் காத்திருக்க வைக்கிறார்கள். தான் வந்த விடயத்தை கூறி அதை முடித்து தரும்படி கேட்டால், முகாமைத்துவ உத்தியோகத்தர்களான இளைஞர்கள் அதனை

கவனத்தில் எடுக்காது தங்களுக்குள் சிரித்து கதைத்து பொழுதைப் போக்கிக் கொண்டும் தற்செயலாக திரும்பிப் பார்த்து தாம் இருப்பதை கண்டு " அம்மா கொஞ்சம் இருங்கள் ஆள் வரணும்' என்று சமாளிக்கிறார்கள். வைத்தியசாலைகளில் அவர்கள் படும் பாடு மிகவும் பரிதாபத்திற்குரியது. அனேகமாக தினமும் பெருந்தொகையான முதியவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு செல்வதுண்டு ஒருவர் தன்னை மருத்துவ பரிசோதனைக்கு

உட்படுத்தப்படுகிறார்கள் என்றால் மருத்துவ பரிசோதனைக காக போதனா வைத்தியசாலைக்கு அதிகாலையிலேயே முதியவர்கள் வந்த போதும் தமக்குரிய மருந துகளை வாங்கிச் செல்வதற்காக ஒருநாள் பொழுதை அங்கு செலவிட வேண்டியவராக இருக்கிறார்கள். அங்கு பணியாற்றும்

ஊழியர்கள் தாங்கள் விரும்பியபடி எல்லாம் அந்த மூத்த மனிதர்களை ஆட்டிப் படைக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நடைமுறைகளை ஏற்படுத்தி அவர்களை படாத பாடு படுத்துகிறார்கள்.

இது தொடர்பாக மாரிமுத்து என்பவர் கூறுகையில் ஒரு நாளைக்கு கிளினிக் கொப்பிகளை மேசையில் அடுக்குங்கள் என்கின்றார்கள். மறுநாள் "போய் வாங்கில் இருங்கள் வந்து வாங்குவோம்' என்பார்கள். இன்னொரு நாளைக்கு அடுத்த வாங்கில் இருங்கள் என எழுப்பி விடுவார்கள். தமக்கு வேண்டப்பட்டவர்கள் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்த பின்னரே முதியவர்களை நோக்குகிறார்கள். நாள் முழுவதும் வைத்தியசாலை வாங்கிலே தவம் கிடந்து ஒருபடியாக மருத்துவ பரிசோதனையை முடித்துக் கொண்டு மருந்து வாங்க சென்றால் பசி தாகத்துடன் நீண்ட நேரம் கால் கடுக்க வரிசையில் நின்றாலும் அங்கும் ஊழியர்கள் இடையில் புகுந்து தமக்கு தேவை யானவர்களிடமிருந்து மருந்து கொப்பியை மருந்தாளரிடம் கொடுத்து வாங்கி கொடுக்கிறார்கள். நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருக்கும் தம்மை தாமதம் இன்றி அனுப்பி வைக்க வேண்டும் என்ற சிந்தனை எள்ளளவும் இல்லாதவர்களாக மருந்தாளர்கள் நடந்து கொள்வது குறித்து மனம் வெறுத்துப் போவதை கவனிப்பார் யாருமே இல்லை.

வரிசையில் நிற்கும் முதியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துகள் கூட

(7ஆம் பக்கம் பார்க்க..)

# அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு காசா போரை நிறுத்த 20 அம்ச திட்டம்: இஸ்ரேல் ஆதரவு ஹமாஸ் மௌனம் முஸ்லிம், அரபு நாடுகள் வரவேற்பு



காசா போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் 20 அம்ச திட்டத்தை அறிவித்துள்ளார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடனான சந்திப்பை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இதற்கு நெதன்யாகு மற்றும் இஸ்லாமிய, அரபு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஹமாஸ் இதுவரை எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. காசாவில் உள்ள ஹமாஸ் போராளிகள் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்து கொடூர தாக்குதல் நடத்தினர்.

இதில் ஏராளமான இஸ்ரேல் ராணுவ வீரர்கள் உட்பட 1000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 250க்கும் மேற்பட்டோரை ஹமாஸ் பிணைக்கைதிகளாக காசாவிற்குள் பிடித்துச் சென்றது. இதற்கு பதிலடியாக காசா மீது இஸ்ரேல் ராணுவம் போர் தொடுத்தது. சுமார் 2 ஆண்டாக நீடிக்கும் இப்போரில் காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் 66,000 பேர் பலியாகினர். காசாவின் ஒட்டுமொத்த உள்கட்டமைப்பும் தகர்க்கப்பட்டுள்ளது. காசாவில் எஞ்சியிருக்கும் பாலஸ்தீன மக்கள் உணவுப் பஞ்சத்தில் தவித்து வருகின்றனர்.

இதனால் இப்போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன. தற்போது நடந்து வரும் ஐநா பொதுச் சபை கூட்டத்திலும் காசா போரை உடனடியாக நிறுத்த வேண்டுமென அமெரிக்க அதிபர் டிரம்ப் உள்ளிட்ட உலக தலைவர்கள் குரல் கொடுத்தனர். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பதாக ஐநாவில் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் அமெரிக்கா சென்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெள்ளை மாளிகையில் நேற்று அதிபர் டிரம்பை சந்தித்து பேசினார். அப்போது, காசா போரை முடிவுக்கு கொண்டு வரவும், காசாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கவும் 20 அம்ச திட்டத்தை டிரம்ப் வெளியிட்டார். இதற்கு நெதன்யாகு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார். மேலும், கத்தார், துருக்கி, பாகிஸ்தான், எகிப்து, இந்தோனேசியா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட இஸ்லாமிய மற்றும் அரபு நாடுகள் அனைத்தும் டிரம்ப் திட்டத்தை வரவேற்றுள்ளன.

காசாவை மறுகட்டமைப்பு செய்வதில் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளும் செய்ய தயாராக இருப்பதாக கத்தார் தெரிவித்துள்ளது. ஆனாலும், டிரம்பின் போர் நிறுத்த பரிந்துரைகள் குறித்து ஹமாஸ் அமைப்பு எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. ஹமாசின் பேச்சுவார்த்தை குழு 20 அம்ச திட்டத்தை ஆய்வு செய்து வருவதாகவும், விரைவில் முடிவை அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதனால் விரைவில் காசா போர் முடிவுக்கு வரும் சூழல் உருவாகி உள்ளது.

பிரதமர் மோடி தனது எக்ஸ் பதிவில், “காசா மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிபர் டிரம்பின் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இது, பாலஸ்தீன மக்களுக்கும் இஸ்ரேல் மக்களுக்கும், மேற்காசிய பிராந்தியத்துக்கும் நீடித்த நிலையான அமைதியை, பாதுகாப்பை, வளர்ச்சிக்கான பாதையை வழங்குகிறது. சம்பந்தப்பட்ட அனைவரும் அதிபர் டிரம்பின் முயற்சிக்குப் பின்னால் ஒன்றிணைந்து மோதலை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தும் இந்த முயற்சியை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்” என்று தெரிவித்துள்ளார்.

டிரம்பின் 20 அம்ச திட்டத்தில் உள்ள முக்கிய பரிந்துரைகள்:

காசா இனி தீவிரவாதம், பயங்கரவாதம் இல்லாத நாடாகவும், அண்டை நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இல்லாததாகவும் இருக்கும்.

கடுமையாக பாதிக்கப்பட்ட காசா மக்களின் நலனுக்காக காசா மறுவடிவமைப்பு செய்யப்படும்.

இந்த திட்டத்திற்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டால், போர் உடனடியாக முடிவுக்கு வரும். வான்வழி, பீரங்கி தாக்குதல் உட்பட அனைத்து ராணுவ நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் பகிரங்கமாக ஏற்றுக் கொண்ட 72 மணி நேரத்திற்குள், உயிருடன் உள்ள மற்றும் இறந்த அனைத்து பணயக்கைதிகளும் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்டவுடன், 250 ஆயுள் தண்டனை கைதிகள் மற்றும் 1,700 காசா மக்களை இஸ்ரேல் விடுவிக்கும்.

அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்ட பின், ஆயுதங்களை கீழே போட்டு அமைதியான வாழ்க்கைக்கு திரும்புவதாக உறுதியளிக்கும் ஹமாஸ் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். காசாவை விட்டு வெளியேற விரும்பும் ஹமாஸ் அமைப்பினர் விரும்பும் நாடுகளுக்கு செல்ல வழிவகுக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், முழு உதவி பொருட்களும் உடனடியாக காசா பகுதிக்கு அனுப்பப்படும். உள்கட்டமைப்பு (நீர், மின்சாரம், கழிவுநீர்) மறுசீரமைப்பு, மருத்துவமனைகள் மற்றும் பேக்கரிகளின் மறுசீரமைப்பு மற்றும் இடிபாடுகளை அகற்ற தேவையான உபகரணங்கள் வழங்கப்படும்.

காசா பகுதியில் விநியோகம் மற்றும் உதவிகள் இருதரப்பினரின் குறுக்கீடு இல்லாமல், ஐநா மற்றும் அதன் நிறுவனங்கள், ரெட் கிரசண்ட் மூலம் தொடரும்.

காசா ஒரு தொழில்நுட்ப, அரசியல்சார்பற்ற பாலஸ்தீனிய குழுவின் தற்காலிக இடைக்கால நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும். இதனை சர்வதேச நாடுகள் அடங்கிய இடைக்கால அமைதி குழு மேற்பார்வையிடும். இக்குழு அதிபர் டிரம்ப் தலைமையில் செயல்படும்.

மத்திய கிழக்கில் செழிப்பான நவீன நகரங்களை உருவாக்க உதவிய நிபுணர்கள் குழு மூலம் காசா மறுஉருவாக்கம் செய்யப்படும். டிரம்ப் பொருளாதார மேம்பாட்டு திட்டம் உருவாக்கப்படும். சிறப்பு பொருளாதார மண்டலம் நிறுவப்படும். யாரும் காசாவை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட மாட்டார்கள். வெளியேறவும், திரும்பி வரவும் முழு சுதந்திரம் வழங்கப்படும்.

ஹமாஸ் மற்றும் பிற பிரிவுகள் காசாவின் நிர்வாகத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது எந்த வடிவத்திலும் எந்தப் பங்கையும் கொண்டிருக்க மாட்டார்கள். சுரங்கப்பாதைகள் உள்ளிட்ட எந்த ராணுவ கட்டமைப்பும் மீண்டும் கட்டப்படாது.

காசாவில் பாதுகாப்பு பணி மேற்கொள்ள அரபு மற்றும் சர்வதேச கூட்டாளர்களுடன் இணைந்து அமெரிக்கா தற்காலிக சர்வதேச படை (ஐஎஸ்எப்) உருவாக்கும்.

இஸ்ரேல் காசாவை ஆக்கிரமிக்கவோ அல்லது இணைக்கவோ மாட்டாது.

அமைதியான, வளமான வாழ்வுக்கான இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே அமெரிக்கா பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்யும்.

## பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 26 பேர் உயிரிழப்பு!



பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் 6.9 ரிக்டர் அளவுகோளில் சக்திவாய்ந்த நிலநடுக்கும் ஏற்பட்டுள்ளது. கட்டிட இடிபாடுகளில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம். பல்வேறு கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும், மீட்புப் பணிகள் தொடர்ந்து வருவாதவும் அந்நாட்டு அரசு தகவல் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில், பின்னர், சுனாமி எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் கட்டிடங்கள் சரிந்து விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. சாலைகளில் திடீர் பள்ளங்கள் ஏற்பட்டன. இந்த நிலநடுக்கத்தின் மையமானது லெய்டே பகுதியில் பூமிக்கு அடியில் சுமார் 10.4 கி.மீ. ஆழத்தில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் இடிபாடுகளில் சிக்கி இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்கள் மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. (ஐ)



## அமெரிக்க அரசின் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிப்பு!

அமெரிக்க அரசின் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளுக்கும் நிதி ஒதுக்கும் மசோதாவுக்கு செனட் சபை ஒப்புதல் அளிக்காததால் அமெரிக்க அரசு தற்காலிகமாக முடங்கியது. 100 பேர் கொண்ட செனட் சபையில் 60 பேரின் ஆதரவு இருந்தால்தான் நிதி ஒதுக்கும் மசோதா நிறைவேறும். ஓட்டெடுப்பில் மசோதாவுக்கு ஆதரவாக 55 பேரும் எதிராக 45 பேரும் வாக்களித்ததால் மசோதா நிறைவேறவில்லை. அமெரிக்க அரசு முடங்குவது கடந்த 7 ஆண்டுகளில் இது முதல் முறை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் பல சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியுடன் பயணித்திருந்தனர்.

இந்தக் குழுவினர் தாய்லாந்தின் பெங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானமான ருடு-403 மூலம் இன்று காலை 9:30 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத்துக்கான எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## கைவிடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிந்தவூரை பிரதேசத்தை சேர்ந்த தாயை செவ்வாய்க்கிழமை (30) கைது செய்தனர்.

அத்துடன் காதலித்து வந்த தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் 17 வயது உடையவர்கள் எனவும் அவர்களுக்கு திருமணமாகாத நிலையில் குறித்த குழந்தை பிறந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் குழந்தையின் தந்தையின் உறவினர்கள் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) குறித்த பெண் தனது வீட்டில் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

இவ்விடயத்தை அறிந்து கொண்ட குழந்தையின் தந்தை, காதலியின் வீடு சென்று தனது குழந்தையை நான் வளர்க்கிறேன் தாருங்கள் என்று பெற்றுக் கொண்டு வந்துள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதையடுத்து குழந்தையின் தந்தை அவரது உறவுக்கார பெண் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒலுவில் பகுதியில் கைவிடப்பட்டுள்ள பெண் குழந்தை ஒன்றைக் கண்டெடுத்துள்ளேன். உங்களுக்கு பெண் குழந்தை இல்லை. எனவே இந்தக் குழந்தையை வளர்க்க முடியுமா என கேட்டுள்ளார். அதற்கு அவர் உறவுக்கார பெண்ணும் சம்மதித்துள்ளார்.

இந்த நிலையில் குழந்தையின் தொப்புள் கொடி உரிய முறையில் வெட்டப் படாமை காரணமாக அந்த இடத்திலிருந்து ரத்தம் கசிந்ததை அடுத்து அருகில் உள்ள ஒலுவில் வைத்தியசாலைக்கு அந்தக் குழந்தையை கொண்டு சென்றுள்ளனர். இதனையடுத்தே குழந்தையொன்று ஒலுவில் அண்டிய பகுதியில் நபரொருவரால் கண்டெடுக்கப்பட்டதாக கதை பரவியது.

இந்தப் பின்னணியில்தான் குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோர் அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குளவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த சம்பவம், புதன்கிழமை (01) நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழுந்து பறித்துக்கொண்டிருந்த வேளையில், தேயிலைச் செடியின் கீழ் பகுதியில் இருந்த குளவி கூடு கலைந்து, கொட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட ஒன்பது பேரும் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்க பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் நால்வர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறி உள்ளனர் என்றும் ஐந்து பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட வைத்திய சாலையில் உள்ள வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் கடந்த 8ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரில் புதிதாக நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் ‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்’ எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த 9ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், அதில் திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட முதலாவது மீளாய்வு வரைவு கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம். பி., அங்கு நடைபெறவுள்ள பக்க நிகழ்வொன்றில் பங்கேற்கவுள்ளார். அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினதும், பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை அவர் நடத்துவார் என்றும், அதன்போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# "இலங்கையை கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்ப்போம்" ஜனாதிபதி



சிறுவர்கள் மற்றும் முதியவர்களின் நல்வாழ்வுக்காக நாங்கள் தொடர்ந்து செயலாற்றி வருகிறோம் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உலக சிறுவர்கள் தினம் மற்றும் உலக முதியோர் தின வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலம் சிறுவர்களின் கைகளிலே உள்ளது. அவர்களின் உலகம் உண்மையான மற்றும் அழுக்கற்ற உலகம் என்பதால் அது மிகவும் அழகானது. அந்த அழகை அனுபவிக்க அவர்களுக்கு தடையற்ற வாய்ப்பை வழங்குவது ஒரு சமூகத்தின் பொறுப்பாகும்.

உரிமைகளுடன் கடமைகளும் பொறுப்புகளும் வருகின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் ஒரு அரசாங்கமாக, சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நாங்கள் எப்போதும் உறுதிபூண்டுள்ளோம். சிறுவர் என்பது யார் என்பதை மிகவும் நடைமுறை மற்றும் விரிவான முறையில் வரையறுப்பதன் மூலம் சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான தலையீடுகளை நாங்கள் செய்து வருகிறோம்.

அதில் சகல பிள்ளைகளினதும் உடல், உள நலன் மற்றும் அபிவிருத்திக்காக கல்விக்கான சமமான பிரவேசம், வழிகாட்டுதல், சமூகப் பாதுகாப்பு, சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், பாகுபாடு மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் பாதுகாப்பு, அத்துடன் அனைத்து பிள்ளைகளின் உடல் மற்றும் மன நல்வாழ்வு மற்றும் மேம்பாட்டிற்காக சரியான ஊட்டச்சத்தை வழங்குதல் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

பாடசாலை செல்லும் வயதுடைய எந்த ஒரு பிள்ளையும் இனம், பொருளாதார நிலை அல்லது வேறு எந்த காரணிகளாலும் கல்வியை இழக்கக்கூடாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

எனவே, இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், ஒட்டிசம் உள்ளிட்ட வளர்ச்சி குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கான சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய சேவை வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளோம்.

அத்தகைய சமயத்தில், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு இந்த ஆண்டு உலக சிறுவர்கள் தின கொண்டாட்டத்தை “ உலகை வழிநடாத்த - அன்பால் போஷியுங்கள்” என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்வதன் மூலம் அந்த இலக்குகளை நோக்கி செல்ல மேலும் வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த விசேட தினத்தில், நம் பிள்ளைகளுக்கு அன்பு, ஆதரவு மற்றும் பாதுகாப்பை வழங்குவதாக நாம் மீண்டும் உறுதிமொழி அளிக்கிறோம். அவர்களின் மகிழ்ச்சியான புன்னகை நமது தேசத்தின் நம்பிக்கையும் பலமும் ஆகும்.

மேலும், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு நமது முதியவர்கள் அளித்த பங்களிப்பிற்காக அவர்களுக்கு நமது மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுவர்களும் முதியவர்களும் பாதுகாப்பும் மரியாதையும் நிறைந்த இலங்கையை கட்டியெழுப்ப நாம் அனைவரும் கைகோர்ப்போம்! எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# உருளைக்கிழங்கு மற்றும் சீனி இறக்குமதியில் பெரும் மோசடி: சஜித் பிரேமதாச் குற்றச்சாட்டு



அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் சீனி இறக்குமதியில் பெரும் மோசடி நடைபெற்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

பொலன்னறுவை - மின்னேரியவில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவரின் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது சஜித் பிரேமதாச மேற்குறித்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டஅவர், இந்த அரசாங்கம் விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தவில்லை.

அதே போன்று உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்துக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி காரணமாக விவசாயிகளுக்கு எதுவித பிரதிபலனும் கிடைப்பதில்லை.

அவற்றுக்கு வரி விதிக்கமுன்னரே உருளைக்கிழங்கும், பெரிய வெங்காயமும் பெரும் தொகையாக இறக்குமதி செய்யப்படடு களஞ்சியப்படுத்தப்பட்டுவிட்டது.

விவசாயிகளின் பிரச்சினை மற்றும் யானை - மனித மோதல்களைத் தீர்ப்பதற்கான என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிப்பதே எங்கள் கட்சியின் நிலைப்பாடாகும் என்றும் அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# மூத்த தலைமுறையினரின்.....

முழுமையாக கிடைப்பதில்லை கால்கடுக்க நீண்ட நேரம் நின்றும் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். பஸ் பயணங்களிலும் அவர்கள் துன்பப்படுகின்றனர்.

நீண்ட தூர பயணங்களிலும் கூட அவர்கள் நிற்க வேண்டியுள்ளது. இருக்கைகளில் இருக்கும் இளசுகள் கண்டும் காணாதவர்களாக எங்கேயோ பார்க்கிறார்கள் அல்லது தொலைபேசியை பார்க்கின்றனர். மோட்டார் சைக்கிளில் வரும் இளைஞர்கள் வீதி ஒழுங்குகளை கடைபிடிப்பதில்லை. துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் முதியவர்களை பார்த்து "சொல்லிட்டா வந்தீர்கள்" என்கிறார்கள். தனியார் பஸ்களில் நடத்துனர்களாக உள்ள இளசுகள் பஸ் தரிப்பிடங்களில் இளம் பெண்களின் முதுகில் கையை வைத்து பௌவ்வியமாக உள்ளே ஏற்றி விடும் அதே சமயம் முதியவர்கள் எனின் "அப்பு அல்லது ஆச்சி கெதியா ஏறுங்க' என்கிறார்கள்.

இளைஞர்கள் முந்திக்கொண்டு ஓடி இருக் கைகளை பிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இளைஞர்களின்உலகம்இப்படிபோய்க்கொண்டிருப்பதில் முதியவர்கள் விரக்தி அடைகிறார்கள்.

இளம் சமூகம் எல்லாமுமே இப்படி என்றல்ல. தமது பெற்றோர்களை மட்டுமின்றி ஏனைய முதியவர்களை மதித்து உதவுபவர்களும் உள்ளார்கள். இத்தகையவர்கள் மிகவும் குறைந்த அளவினரே பெரும்பான்மையான இளைஞர்களிடம் இந்த நல்ல அம்சத்தை காண முடியாது.

முதியவர்களை கிண்டல் அடிப்பதிலும் உரிய மரியாதை வழங்காது சில்லறை கிண்டல்களை கையாள்வதும் ஏதோ தாங்கள் பெரிய சாதனையை நிகழ்த்தி விட்டதாக எண்ணி பெருமிதமாக நடந்து கொள்கின்றனர். இவர்கள் சமூகம் தம்மை எந்த அளவில் எடுத்துக் கொள்கின்றது. என்பது

பற்றி சிந்திக்க வேண்டும் நாளை நாங்களும் முதியவராகலாம் என்ற வாழ்வு நிலை தத்துவங்களை புரிந்து கொண்டால் தமது செய்கைக்காக நிச்சயம் வருத்தம் அடைவார்கள்.

அரசு விசேட அடையாள அட்டை வழங்கி விட்டால் முதியவர்களுக்கான கௌரவத்தை வழங்கியதாகவோ சிறுவர் முதியோர் தினம் என கொண்டாடிவிட்டால், முதியோர் எல்லோரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் வாழுகிறார்கள் என்றோ எண்ணாது அவர்களின் வாழ்வு

குறித்து அனுமானங்களை சட்ட ரீதியாகவும் மனிதாபிமான முறையிலும் அணுகக்கூடிய வழிமுறைகளை இளைஞர்களுடன் இணைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2025 வெளியிடப்பெற்றது.